**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமை பிரசங்கம்**
**22 ஜூலை 2016 / 17 ஷவ்வால் 1437**

# **"ஹிக்மா" வின் இரண்டாவது தூண் "ஹில்ம்" ஆகும்**

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَه وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً
عَبْدُه وَرَسُوْلُه الْمَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللَّهُمَّ صَلِّ
عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.
أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான உச்சகட்டமான "தக்வா" (பக்தியால்) நமது உள்ளங்களை நிரப்புவோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போமாக! அல்லாஹ் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக! அல்லாஹ்,

அவனது மன்னிப்பை நமக்கு வழங்குவானாக! அவனது நல்லடியார்களில் நின்றும் நம்மை இடம் பெறச் செய்வானாக! ஆமீன்.

ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஒருவரைப் பார்த்து: படைப்பாளனாகிய அல்லாஹ் அவரை நேசிக்கின்றான் எனக் கூறினால் அதனை விரும்பாதவர்கள் யாரும் இருக்க முடியுமா? நபித்தோழர்களில் ஒருவராகிய "அஸ்ஜத் அப்துல் கைஸ் (ரலி)" அவர்களுக்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் வழங்கிய பின்வரும் உபதேசத்தை இங்கு சிந்தித்துப் பார்ப்போமாக!:

إِنَّ فِيكَ خَصْلَتَيْنِ يُحِبُّهُمَا اللَّهُ الْحِلْمُ وَالأَنَاةُ

பொருள்: நிச்சயமாக உம்மிடத்தில் இரண்டு சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. அவற்றை அல்லாஹ் நேசிக்கின்றான். ஒன்று, "ஹில்ம்" (சாந்தமான, மிருதுவான குணம்). மற்றொன்று, "அல்-அனாஹ்" (அமைதி) (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் அன்பை அடைவதற்கு நமக்குப் பல வழிகள் உள்ளன. அதில் ஒன்று, தற்போது உங்களுக்குக் கூறப்பட்ட இரண்டு சிறப்பியல்புகளால் நம்மை அலங்கரித்துக் கொள்வதாகும். அவை தான்,

”அல்-ஹில்ம்” ”அல்-அனாஹ்” என்பவையாகும். அல்-ஹில்ம், அல்-அனாஹ் என்றால் என்ன?

”அல்-ஹில்ம்” என்றால், ஒருவர் பழிவாங்கும் ஆற்றலைப் பெற்றிருந்த போதிலும், தனது கோபத்தை அடக்கி, பழிவாங்குவதைத் தவிர்க்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாகும். ”அல்-ஹில்ம்” என்பதற்கு மற்றொரு வகையிலும் விளக்கமளிக்கலாம். அதாவது, ஒருவர் சங்கடமான, வருந்தத்தக்க சூழ்நிலையை எதிர்கொண்ட போதிலும் தனது உணர்ச்சிகளையும் செயல்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாகும். ”அல்-அனாஹ்” என்றால் செயல்களில் அவசரப்படாமலிருப்பதும் அமைதியைக் கடைப்பிடிப்பதும் ஆகும்.

இவ்விரண்டு சிறப்பியல்புகளும் ஒருவரிடம் காணப்படுமெனில், அவை அவரது சிந்தனை முதிர்ச்சியையும், செயல்பாடுகளில் விவேகத்தையும், ஆன்மீகத்தில் உறுதியையும் பிரதிபலிப்பவையாக இருக்கும் என அறிஞர்கள் கூறுகிறார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ”அல்-ஹில்ம்” எனும் சிறப்பியல்பால் தன்னை எவ்வாறு அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை இங்கு சிந்தித்துப் பார்ப்போம். செய்யிததினா ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை, யூதர்களின் ஒரு கூட்டம் இறைத்தூதர்(ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தார்கள். அவர்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களைப் பார்த்து: “அஸ்ஸாமு அலைக்கும்” (பொருள்: உமக்கு மரணம் உண்டாகட்டுமாக!) எனக் கூறினார்கள். யூதர்கள் கூறிய வாசகத்தின் பொருளை அறிந்து கொண்ட நான்: அந்த யூதர்களை நோக்கி: ”வஅலைக்குமுஸ்ஸாம் வல்-லஃனத்” (பொருள்: உங்களுக்கு மரணமும் அல்லாஹ்வின் சாபமும் உண்டாகட்டுமாக!) எனக் கூறினேன். அப்போது ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: ”ஆயிஷாவே! அமைதியாக இருப்பாயாக! அல்லாஹ் ஒவ்வொரு விஷயத்திலும் மிருதுவானப் போக்கை விரும்புபவனாக இருக்கின்றான்” என என்னைப் பார்த்து கூறினார்கள். அப்போது நான்: அல்லாஹ்வின் தூதரே! அந்த யூதர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நீங்கள் கேட்கவில்லையா? என்றேன். ”ஆம்! நான் கேட்டேன். அவர்களுக்குப் பதிலாக: ”வஅலைக்கும்” (பொருள்: உங்கள் மீதும் உண்டாகட்டுமாக!) எனக் கூறி விட்டேன்” என ரசூலுல்லாஹி(ஸல்) பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

சுப்ஹானல்லாஹ்!(அல்லாஹ் மிகவும் மேலானவன்; பரிசுத்தமானவன்). இவ்வாறு தான், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் குண நலப் பண்புகள் மிகவும் சிறப்பாக இருந்தது. அவர்கள் மீது மோசமான, முரட்டுத்தனமாக கருத்துக்கள் வீசப்பட்ட போதிலும் அவற்றுக்கு கோபத்துடன் கடுமையான வார்த்தைகளால் ரசூலுல்லாஹி(ஸல்) பதிலளிக்கவில்லை. நாகரீகமாக, சாந்தமாகவே பதிலளித்தார்கள். நான் தற்போது உங்களுடன் பகிர்ந்து கொண்ட சம்பவம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களிடம் ”அல்-ஹில்ம்” என்பது

உச்சகட்டமாகக் காணப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ‌ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِى الْاَمْرِ‌ۚ فَاِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ‌ؕ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ

பொருள்: அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே (நபியே!) நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர்; (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள்; எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்தி விடுவீராக; அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக; தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்; பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான். (அத்தியாயம்: ஆலி இம்ரான், வசனம்: 159)

ஜமாஅத்தார்களே!

"அல்-ஹில்ம்" என்பது மிகவும் அவசியமான நற்பண்பு என்பதை யாராலும் மறுக்க இயலாது. இன்று, எத்தனையோ மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் போது, குறிப்பாக, ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில்

பதிவு செய்யும் போது கடுமையான, முரட்டுத்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். எனவே, நாம் விரும்பாத விமர்சனங்களையும், நிலைகளையும் நாம் எதிர்கொள்கின்ற போது "அல்-ஹில்ம்" என்பதை எப்படியெல்லாம் நாம் பின்பற்ற முடியும் என்பதற்கான பல வழிமுறைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**முதன்முதலாக,** அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்தி, மிகவும் நாகரீகமாக, நளினமாகப் பதிலளிக்கலாம். கடுமையான, முரட்டுத்தனமான கருத்துக்களுக்கு அதே மாதிரி தான் பதிலளிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. மாறாக, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் காண்பிக்கப்பட்டுள்ளது போல், மறுபுறம், நாகரீகமாக, நளினமாக நடந்து கொள்வது தான் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" (வழிமுறை) எனும் ரீதியில், பதிலளிக்கும் போது கண்ணியமாக, நளினமாக நாம் நடந்து கொள்ளலாம்.

**இரண்டாவதாக,** நாம் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடும் முன்பாக அமைதியாக இருக்க வேண்டும். எவ்வாறு பதிலளிக்க வேண்டுமெனச் சிந்திக்க வேண்டும். பதிலளிப்பது அவசியமென்பது எல்லாச் சூழ்நிலைகளிலும் இருக்காது. சில சந்தர்ப்பங்களில் பதிலளிப்பது மற்றும் நடவடிக்கையில் இறங்குவதை விட அமைதியாக இருப்பதே சிறப்பாக இருக்கும். குறிப்பாக, பதிலளிப்பதால் எவ்வித பலனும் இல்லை; நிலைமை மேற்கொண்டு மோசமாகி விட வாய்ப்புள்ளது என்ற நிலை இருக்கும் போது பதிலளிக்காமல் இருப்பதே மேலானதாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ஒரு அறிஞர், ஒரு சம்பவத்தை நம்மோடு பகிர்ந்து கொண்டார். அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது, மற்றவர்களை நன்மையின் பால் அழைப்பதிலும் தீய செயல்களிலிருந்து தடுப்பதிலும் ஆர்வமிக்க ஒரு இளைஞர், ஒருநாள், ஒரு கால்நடை மேய்ப்பாளன், தனது ஒட்டகம் வேகமாக நடப்பதற்காக, அதனை ஆர்வமூட்டும் வகையில் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அதே சமயம், பள்ளிவாசலில் "முஅத்தின்" (தொழுகைக்காக அழைப்பு விடுப்பவர்) மஃரிப் தொழுகைக்காக "அதான்" சொல்லிக் கொண்டிருந்தார். எனவே, அந்த மேய்ப்பாளனை இளைஞர் கண்டித்தார்; எனினும், அந்த மேய்ப்பாளன் அதனைப் பொருட்படுத்தவில்லை; இளைஞரின் உபதேசத்தைப் புறக்கணித்து விட்டார். விரக்தியடைந்த அந்த இளைஞர் நடந்த சம்பவத்தை ஒரு "ஆலிம்" (அறிஞரிடம்) சென்று முறையிட்டார்.

மறுநாள், அந்த ஆலிம் அந்த மேய்ப்பாளன் இருந்த இடத்திற்குச் சென்ற போது, அப்போதும் அந்த மேய்ப்பாளன், மஃரிப் தொழுகைக்காக "அதான்" சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் போது, தனது ஒட்டகத்துக்காகப் பாடிக் கொண்டிருப்பதை ஆலிம் கண்டார். அந்த ஆலிம் மிகவும் அன்பாக, நாகரீகமாக அவரை அணுகி: "எனது சகோதரரே! மஃரிப் தொழுகைக்காக அதான் சொல்லப்படுகிறது. நீ தொழுகைக்காக விரைந்து செல்வது தான் சிறப்பாகும். காரணம் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَأْمُرْ اَهْلَكَ بِالصَّلٰوةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ؕ لَا نَسْـَٔلُكَ رِزْقًا ؕ نَحْنُ نَرْزُقُكَ ؕ وَالْعَاقِبَةُ لِلتَّقْوٰى

பொருள்: (நபியே!) உம் குடும்பத்தினரைத் தொழுது வருமாறு நீர் ஏவுவீராக! (தொழுகையின் மீது) நீர் பொறுமையும், உறுதியும் கொண்டிருப்பீராக! நாம் உம்மிடம் உணவு கேட்கவில்லை; ஆனால் உமக்கு உணவை நாம் கொடுக்கிறோம்; இறுதியாகச் சிறந்த நிலை பயபக்தி(யுடையோரு)க்குத் தான். (அத்தியாயம்: தாஹா, வசனம்:132)"

என்று கூறினார். உடனே அந்த மேய்ப்பாளன்: "அல்லாஹ் உங்களுக்கு அன்பாக கூலி வழங்கட்டுமாக!" எனக் கூறி விட்டு, வேகமாக ஒளுச் செய்து, தொழுவதற்காக அந்த ஆலிமுடன் பள்ளியை நோக்கிச் சென்றார்.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட சம்பவத்தில், அந்த வாலிபர் மற்றும் ஆலிம் ஆகிய இருவரும் அந்த மேய்ப்பாளனுக்கு ஒரே விஷயத்தின் பால் அழைப்பு கொடுத்தார்கள். அது தான் தொழுகையாகும். எனினும், அழைப்பு கொடுப்பதில் இருவரின் அணுகுமுறைகள் வித்தியாசமாக இருந்தது என்பதை அறிகிறோம்.

அந்த இளைஞர், மேய்ப்பாளனை கடுமையாகக் கண்டித்தார். அவர் முன்பு தனது சப்தத்தை உயர்த்திப் பேசினார். ஆனால், ஆலிம் மிகவும் அன்பாகவும் நாகரீகமாகவும் அவரை அணுகினார். அந்த இளைஞர் சொன்ன கருத்து உண்மையாக இருந்த போதிலும் அது அந்த

மேய்ப்பாளனிடம் எவ்வித நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், ஆலிமின் அணுகுமுறை அந்த மேய்ப்பாளனின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் மீது கடமையானத் தொழுகைகளைத் தொழும் படி அவரைத் தூண்டியது.

மேற்கண்ட சம்பவத்திலிருந்து நாம் பெற வேண்டிய பாடம் யாதெனில், சில விஷயங்களில் நமது நோக்கத்தை நாம் அடைய முடியாமல் தடையாக இருப்பதற்கு, அவ்விஷயங்களைப் பற்றிய தகவல்களோ அல்லது கல்வியறிவுகளோ நம்மிடம் குறைவாக உள்ளன என்பது மட்டும் காரணமாக இருப்பதில்லை; மாறாக, ஒருவரது குறையை எடுத்துக் கூறுவதில் முறையான அணுகுமுறை நம்மிடம் இல்லாமலிருப்பதும் காரணமாக இருக்கலாம் என்பதாகும். எனவே, நமது online அல்லது offline பழக்கவழக்கங்களில் "ஹிக்மத்" (விவேகம்) மற்றும் "அல்-ஹில்ம்" (சாந்தமான, மிருதுவான குணம்) ஆகியவற்றைக் கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிய வேண்டும். நமக்கு நன்னடத்தைகள், நற்பண்புகள் அருளப்படட்டுமாக! நமது சொல் மற்றும் செயல்களில் "அல்-ஹில்ம்" மற்றும் "அல்-அனாஹ்" ஆகிய சிறப்பியல்புகளால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வதை அல்லாஹ் நமக்கு எளிதாக்கட்டுமாக! அதன் மூலம் அல்லாஹ்வின் அன்பை இம்மையிலும் மறுமையிலும் பெறுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.